தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௰௬–௮௭ மன்மத, மார்கழி, 1955 டிசம்பர், 1956 ஜனவரி.	மலர்
௩௧		௯.

புயலும் வெள்ளமும்

தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுர மாவட்டங்களின் பகுதிகளில் வீசிய புயலும், பெய்த பெருமழையும் மிக்க பெரிய அழிவை ஏற்படுத்தி விட்டன. கடும்புயலால் தஞ்சைப் பகுதியும், வெள்ளப்பெருக்கால் இராமநாதபுர மாவட்டமும் மிக்க அழிவை அடைந்துவிட்டன. பதிற்றுப்பத்தில், இரண்டாம் பத்தின் ஆசிரியர், "மாஞமாட்சிய மாண்டன பலவே" மாட்சிமைப் படத்திருத்தினும் மாண்புகளையடைவாய் உருவற அழிந்தன என்னும் கருத்துப்படக் கூறிய காட்சியை இன்று கண்ணெதிரில் காணுகின்றோம். நூற்றுக் கணக்கான மக்களும், ஆயிரக்கணக்கான ஆடுமாடுகளும் அழிந் தொழிந்துபோயின. இக்கெடுதிகளைச் சென்னை மண்டில அரசிய லார் உடனடியாகப்போக்க மேற்கொண்ட முயற்சிகளை மனமாரப் பாராட்டுகின்றோம். அனைத்திந்திய அரசியலாரும் பாராமுகமாக இராமல் பெருமளவுக்கு உதவியமைக்கும், இன்னும் உதவ இருக் கின்றமைக்கும் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். கொடிய புயலாலும், வெள்ளத்தாலும் வீடிழந்து, பொருளிழந்து, உயிரிழந்து தவிக்கும் மக்கட்கு நம்முடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நம்முடைய சங்கச்சார்பில் நிகழும் கல்விநிலையங்களில், உமா மகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் வீடு வீடாகச் சென்று ஏழுமூட்டை அரிசியும், அறுநூற்றுக்கு மேற்பட்ட ஆடைகளும் பெற்று உதவினர். கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்கள் உணவிடுதியின் சார்பில் ஒருமூட்டை அரிசியும், ஐம்பதிற்கும் மேற்பட்ட நல்லாடைகளும் வழங்கினர். புலவர் கல்லூரி இளங்கோவடிகள் கழகச்சார்பில் ஒரு மூட்டை அரிசி

வழங்கப்பட்டது. தமிழ்க்கல்லூரியின் சார்பில் வழங்கப்பட்ட இரு மூட்டைகளில் ஒன்றை இராமநாதபுரம் பகுதிக்கும், ஒன்றைத் தஞ்சைப் பகுதிக்கும் வழங்கவேண்டுமென மாணவர்கள் முடிவு செய்தனர்.

விருந்தினர் வருகை.

சென்ற நவம்பர் திங்களி னிறுதியில் முழு உரிமை பெற்ற இந்தியப் பெருநிலப் பரப்பிற்கு உருசிய நாட்டு ஒப்பற்ற தலைவரான திரு. **புல்கானினும்**, திரு. **குருசேவும்**, பிற பெருமக்களும் வந்தருளினர். இவர்களின் வருகையை முன்னிட்டு இந்திய அரசியலாரும், மண்டில, மாவட்ட அரசியலாரும் மிகவும் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். உரிமைபெற்ற இந்திய நாட்டில் எல்லா வகையான மக்களும் ஒருமித்த மனமுடன் வாழ்த்துக்கூறி வரவேற்கத் தக்க வெளிநாட்டுத் தலைவர்கள் அதுகாறும் யாரும் வரவில்லை. மேற்குறிப்பிட்டவர்களே, கட்சி, கொள்கை முதலிய எந்த வேறுபாடும் கருதாமல் எல்லா வகையான மக்களாலும் அகமும் முகமும் மலர வரவேற்கப்பட்டனர்.

நம் இந்திய நாட்டு முதலமைச்சர், மேன்மை தங்கிய, பண்டித, ஜவஹர்லால் நேரு அவர்கள் உருசிய நாடு சென்ற போழ்தும், அந்நாட்டு அரசியலாரும் மக்களும் ஒருங்கு குழுமி வரலாறறியாத வரவேற்பை நல்கினர். இவ்விரு நாட்டுத் தலைவர்களின் வருகையானது உலகில் பெரிய மாற்றத்தைச் செய்ய வல்லதாகும். அந்த மாற்றம் என்ன? உலகில் ஏற்படும் எத்தகைய சிக்கலையும் தவிர்க்கப் போர் ஒன்றே இறுதியானவழி என்ற பண்டைய போக்கை மாற்றுவதேயாகும். இதுகாறும் உலகிடை நிகழ்ந்த போரால் எந்த சிக்கல்களும் அறவே தீர்ந்து விடவில்லை. மாறுகப் புதுப்புது சிக்கல்கள் தோன்றி வளர்ந்துள்ள தன்மையையே காணுகின்றோம்.

ஆகவே அமைதியான முறையில் எதனையும் தீர்த்துவைக்க முடியுமென்ற கொள்கை இவர்கள் வருகையால் மேலும் உறுதியடைந்துவிட்டது. முதற்கண் உருசிய நாட்டு மக்களும், இந்திய நாட்டு மக்களும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொண்டனர். புரிந்துகொண்டு,

"புதியதோர் உலகு செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"

என்ற புரட்சிக் கவிஞர், திரு. பாரதிதாசனவர்கள் கருத்துப்படி ஒருமித்து நின்று சூளுறவு செய்தனர்.

இவ்வாறு இருநாட்டு மக்களும் சூளுறவெடுக்கக் காரணங்கள் பலவுண்டு. ஜார் மன்னரும் அவரை ஒட்டி நின்ற முதலாளிமார்களுமாய இருவரின் கொடிய பிடிப்பில் சிக்கிய உருசிய நாட்டு அரசியலால் அந்நாட்டு மக்கள் பன்னெடுங்காலம் தொல்லையுற்றவர். தொல்லைகள் பொள்ளெனப் புலர, யாரும் நிகர், அனைத்தும் சரிபங்கென்று ஓரும் உயரிய அரசியலைத் தம் தோள் வலியால் நிறுவி உலகிடை ஒப்பின்றி உயர்ந்துள்ளனர். இந்திய மக்களோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வேற்றவரின் ஆதிக்க ஆட்சியால் அடிமையாக்கப்பட்டு அவதியுற்றவர்கள். அடிமை கொடுத்த இருளகல, நாமிருக்கும் நாடு நமதென்பதைத் தெளிந்து, மக்கள் யாவருக்கும் ஒத்த வாய்ப்பை நல்கும் உயரிய உரிமையை அடைந்துள்ளனர்.

இத்தகைய ஒத்த வரலாற்றை இருநாடுகளும் கொண்டுள்ளமையால் ஒன்றை ஒன்று புரிந்துகொண்டன. தாங்கள் அடைந்த உரிமை அழியாவண்ணம் நிலைநிறுத்த முயலுகின்றன. உரிமை வேட்கை கொண்ட ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீரால் காத்த உரிமைப் பயிரை ஒழித்துவிடமுயலும் கொண்டி மாடு கட்கு வேலி கட்ட முனைந்துவிட்டன. இதில் வியப்பில்லை. கண்ணும் நெஞ்சும் கவருகின்ற மாடமாளிகைகளையும், கூட கோபுரங்களையும் காணுந்தொறும் அவற்றை ஏவிக் கட்டுவித்த மன்னனைக் காணுமுன்னர், அவைகளை உருவெடுக்க ஓயாதுழைத்த உழைப்பாளரின் உழைப்பும் பெருமையும் அவர்கள் கண்களுக்குப் பட்டன.

"தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ" என்றபடி உழைப்பையும் உழைப்பாளரையும் போற்றும் மனப்பான்மையை இவர்கள் வருகையால் நம் நாடு கொள்ளுமாக. இந்திய நாட்டுக்கு வந்த விருந்தினர் தென்னாட்டிற்கும் போந்தமைக்கு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். அவர்கள் தென்னாடு வந்தபோழ்து தமிழிலேயே வரவேற்பளித்த கோவை, சென்னை நகராண்மைக் கழகங்களைப் பாராட்டுகின்றோம்.

* *

சென்ற இதழின் தொடர்ச்சி.

தையற் றொழில்

வித்துவான். த. பொ. தண்டபாணி, B. A.,

காலப்போக்கில் நமது முன்னோர்களுக்குண்டான வீழ்ச்சியில், அவர்களின் கலைத்திறன்கள் எல்லாம் களவாடப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டன. அவற்றின் துணையானே இன்று மேனாட்டிலிருந்து தையல் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இனி "கச்சை" என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் சிற்சில இடங்களில் நிலவுவதை நாம் படிக்கின்றோம். இங்கே சிலப்பதிகாரத்தில் இந்திர விழவூர் எடுத்த காதையில் 10-வது அடியில் அச்சொல் வருகிறது.

அதாவது :— "**கச்சை** யானைப் பிடர்த்தலை ஏற்றி" என்பதாம். கச்சை என்பது நமக்குத் தெரியும். இப்போதும் நம்முட் பலர் அதனை அணிகின்றனர். அதன் வகைகள் எண்ணில. அளவும் நீளமும் வேறுபடுகின்றன. வண்ணமும் அழகும் நமது கண்களைக் கவர்கின்றன. எனினும் கச்சை என்ற சொல் மாறுபட்டிலது. அதுவும் முரட்டுத் துணி வகையில் சேர்ந்ததே. கைத்தறி நெசவின் மேம்பாட்டையும் அது எடுத்து விளக்கும். அதன் ஓரங்களை நல்ல தடித்த ஊசிகளைக் கொண்டு மடக்கித் தைக்கவேண்டும். இன்றேல் நமது இடுப்பையே அது துண்டித்து விடும். அவ்வளவு கூர்மையும் உறப்பும் உடையது. இக்கச்சையில் பெரிய அகலத்தும் நீளத்தும் செய்யப்பட்டதைக் கொண்டேதான். பழைய மன்னர்களாலும் மடாதிபதிகளாலும் கோவில்களிலும், அரச அவைகளிலும் பிற இடத்திலும் போற்றி வளர்க்கப்பட்ட யானைகளின் கீழ் வயிற்றினை இறுகப்பிடித்து வளைத்துக் கட்டினார்கள் ஏன்? அவைகள் மதங்கொண்டு அடங்காமல், கட்டு மீறி ஓடி விடாமல் இருப்பதற்கேயாம். அப்பழக்கம் இன்றும் இருக்கிறது. கச்சையணிந்த ஆனையை திருவிழாக்காலத்து, மக்கள் திரளின் மத்தியில் பார்க்கிறோம். அக்கச்சையின் வேலைப்பாட்டினையும், பலவகை வண்ணச் சிறப்பினையும், அதன் அழுத்தத்தையும் நாம்

பார்த்து மகிழ்கிறோம். பாகன் அக்கச்சையில் இடையிடையே பற்பல தடித்த நூற் கயிறுகளைச் செருகி முடியிட்டு அவற்றை யானையின் பிடரியில் சுற்றிவிட்டு அவற்றை மிதித்து ஏறுவதற் குத் தக்கவாறு ஒழுங்கு படுத்திக்கொள்கிறான்.

இக்கச்சையினைத் தைக்கும் தொழில் நமது முன்னோர்கள் அறிந்த ஒன்றே. முரட்டுத் துணிகளைக் கட்டுப்படுத்தித் தைக்கும் கடின உழைப்பின் உயர்வை அவர்கள் நன்கறிந்திருந் தனர்.

நக்கீரர் தாம் உரைத்த நன்முருகாற்றுப் படையில் "தைஇய" என்ற சொல்லை நான்கு இடங்களில் அமைத்துப் பேசியுள்ளார். அவை வருமாறு :—

1. திருப்பரங்குன்றம் — அடி — 24. "திலகம் **தைஇய** தேம் கமழ் திருநுதல்"

2. திரு ஆவினன்குடி — அடி 126. "சீரை **தைஇய** உடுக்கையர் சீரொடு"

3. திரு ஆவினன்குடி—அடி 128–129 "மானின்—உரிவை **தைஇய**"

4. பழமுதிர் சோலை — அடி 222 "வேலன் **தைஇய** வெறி அயர்களனும்" என்ப.

அவற்றுள் முதலில் "திலகம் **தைஇய**" என்ற சொற் றொடரில் "**தைஇய**" என்ற வினை எச்சத்திற்கு "இட்டு" என்ற வினை எச்சப் பொருளைத் தந்தார். இரண்டாவதில் "சீரை **தைஇய**" என்பதில் "**தைஇய**" என்பதற்கு "**தைத்து**" என்ற பொருளை வழங்கினர். மூன்றாவதில் "உரிவை **தைஇய**" என்ற சொற்றொடரில் "**தைஇய**" என்ற சொல்லுக்கும் "**தைத்து**" என்பதே பொருளாம். நான்கா வதில் "வேலன் **தைஇய**" என்னுஞ் சொற்குச் "**செய்த**" என்னும் பெயரெச்சப் பொருளைத் தந்தனர். அவை முறையே :—

முதன் மூன்று சொற்களும் வினை எச்சமாகவும் கடைசிச் சொல் மட்டும் பெயர் எச்சமாகவும் வழங்கப்பட்டுள்ளது. பெயர்

எச்சத்திற்குப் பண்பு கூற வந்த நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவன்

"செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச்சம்மே"

என்று கூறினன். இம்முறைப்படியே "செய்த" என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைப் பெயர் எச்சப் பொருளை "தைஇய" என்ற சொல்லுக்கு நக்கீரர் அமைத்துச் சென்றமை காணற்குரியது.

தை என்ற பதத்துக்குப் பல பொருள்கள் உள. அவற்றுள் அலங்காரம் என்பது பொருள். அத்துடன் "அல்" என்ற தொழிற் பெயர் விகுதியையும் சேர்த்து "தையல்" என்றாக்கிப் பொருள் கொண்டால் 'அலங்கரித்தல்" என்ற காரியத்தைக் காட்டும். அலங்கரித்தலாகிய காரியத்தைப் பெற்ற பெண்ணுக்குத் "தையல்" என்ற சொல் சாரும்போது காரியவாகு பெயராகின்றது. எனவே தையல் என்ற சொல்லே ஆகு பெயராகத்தான் பெண்ணைக் குறிக்கும் என்க.

மேலும் "தை" என்ற சொல்லுக்கு ஏவல் வினை முற்றாகப் பொருள் கொண்டால் ஊசியும் நூலுங்கொண்டு "தைக்கும் வேலை செய்" என்பது பொருளாம்.

அப்போது "தையல்" என்றால் தைக்கும் வேலைப்பாட்டினைப் பெரிதுங்கொண்ட புடவையை உடுத்தும் பெண் என்று பொருள் கிடைக்கிறது. பெண்கள் கட்டும் துணிகளின் ஓரங்களிலும் முந்தானியிலும் இன்னன பிற இடங்களிலும் தையல் நிறைந்த பல்வேறு பூக்கள் தைக்கப்படுவதை நாம் இன்றும் காண்கின்றோம் அல்லவா? அப்போதும் "தையல்" என்ற சொல் ஆகு பெயராகவே நின்று பெண்ணை உணர்த்துகின்றது. ஏன் இச்சொல்லுக்கு இவ்வாறு பொருள் கூறுகிறேன் எனின், தைக்கும் தொழிலை முன்னாட்களில் நமது நாட்டுப்

பெண்களே பெரிதும் போற்றி வளர்த்திருக்கவேண்டும் என்று ஊகிக்க இடம் உண்டு என்பதைப் புலப்படுத்தவே என்க.

இனி "சீரை தைஇய உடுக்கையர் சீரோடு" (திருமுருகாற்றுப்படை — திரு ஆவினன்குடி — அடி 126) என்ற அடியில் வரும் "சீரை தைஇய" என்ற சொற்றொடரைக் கவனிப்போம். "சீரை" என்ற சொற்கு மரவுரி என்று பொருள். மரவுரிகளையும் தைக்கும் பழக்கம் பண்டைக்காலத்திய தையற்றொழிலாளர்களுக்கு இருந்து வந்ததெனத் தோன்றுகிறது. இக்காலத்தில் மரவுரிகளைத் தைக்கும் பழக்கம் மிக மிகக் குன்றியிருக்கின்றது. நக்கீரர் காலத்திலும் கம்பர் காலத்தும் அத்தொழில் நிலவியிருக்கிறது. கம்ப ராமாயணத்தில் குகப் படலத்தில் "வற்கலையின் உடையானை மாசடைந்த மெய்யானை" என்ற அடியில் கம்பர் வற்கலையாகிய மரவுரியை அணிந்திருந்த குகனைக் காண்கின்றார். எனவே வற்கலை என்ற சொல்லுக்கு மரவுரி என்ற பொருளைப் பெற்றும்.

சீரை அல்லது வற்கலை என்ற மரவுரியைத் தைத்து ஆடையாக அணிந்தார்கள் என்பதே நமக்குத் தேவை. பஞ்சின் மெல்லிய ஆடையைக் காட்டிலும் மிக நுட்ப மரவுரிகள் அக்காலத்தில் கிடைத்திருக்கவேண்டும். அவற்றைத் தைத்து உடுக்கும் பழக்கத்தை அந்தணர் முதல் கீழ்மக்கள் வரையிலும் மேற்கொண்டிருக்க வேண்டும் என்று புலப்படுகிறது. எப்படி?

"சீரை தைஇய உடுக்கையர்" என நக்கீரர் பெருந்தவசிகளைக் குறிப்பிடுகின்றார். ஒழுக்கமெனுங் குன்றேறி நின்ற செம்மல்களைக் குறிக்கின்றார். ஆனால் கம்பரோ குகப்படலத்தில் "**வற்கலையின் உடையானை** மாசடைந்த மெய்யானை" என்று குகனைக் குறிப்பிடுகின்றார். குகனின் பிறப்புந் தொழிலும் நமக்குத் தெரியும். ஆதலின் குகன் போன்றவர்களும் பேராதரிக்கும் அடியார்களான கற்றோர் அறியா அறிவினர்களும் மரவுரியை தைத்து உடுத்தனர் என்பதே நான் எடுத்துக் காட்ட விரும்பிய பொருள். (தொடரும்)

கவிதை

ந. செகதீசன்

இலக்கியம் மொழிக்கு இயக்கமும் எழிலும் ஏற்றமும் தேடித்தரவல்ல கண்ணனைய சீரும் சிறப்பும் வாய்க்கப்பெற்ற தாகும். அவ்விலக்கியம் இயங்கற்குரிய வழிகள் இரண்டாம். அவை உரைநடையும் கவிதையுமாம். இதனுள் கவிதை கற்போர் நெஞ்சைப் பிணித்துக் களிப்பையள்ளிச் சொரிவத னாலேயே எந்நாட்டவரும் ஏற்றமாய்க்கருதிப் போற்றி வளர்த் தனர். மனிதவினத்தின் மாட்சிசால் படைப்பாகிய இக்கவிதை யென்னும் கவினுறு பொருளின் தொன்மை, பன்மை, நன்மை களை நாடியே இதனை உரைநடையிலும் மிக விரும்பினர். மனிதனது மொழியும் உணர்வும் படைக்கின்ற ஒரு தனிப் படைப்பாகும்கவிதையென மேற்புல அறிஞர் காரட் என் பாரும் கூறிப்போந்தார் (Poetry is a special perfection of human speech and human spirit—Garrod).

எது கவிதை என்ற வினவிற்கு,

"உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை" —(கவிமணி)

என்ற கவிதையே விடைதரும். கவிதை எங்ஙனம் தோன்றி யது? எதற்கும் ஒரு படிதிரட்ட வேண்டுமென்ற விழைவும், இசைப்போக்கில் ஈடுபட்ட சிந்தையும் கவிதையின் தோற்றத் திற்குக் கால்கோளாவன எனவுரைப்பர். நிகழ்ச்சி, அதில் தோயும் அறிவு, அதைப் பெருக்கும் கற்பனை; இவை மூன்றனது கூட்டுறவே கோதற்ற கவிதையின் தோற்றம். மனிதவுலகு, இயற்கையுலகு இவையிரண்டே கவிஞன் தொழில் அரங்கங் களாம். (The world of nature and the world of man

are the two great fields in which the poet works) அழகுப் பெருக்கமும், சொற்சுருக்கமும் சேர்ந்தாடும் அரங்கமாகிய கவிதை சுரந்துவரும் கவிதைநெஞ்சம் காலத்தைவென்று வாழும் பீடும் பெருமையும் சான்றதாகும். அவ்வுள்ளம் அழகொழுகத் தோற்றுவிக்கின்ற கவிதையென்னும் கலையரசி, ஆங்கில நாட்டு வியன் புலவன் ஜான்சன் பாங்குறப் பகர்ந்தாங்கு உண்மை முயற்சி ஆகிய பண்பிரண்டிற்கும் பிறக்கின்றாள். நடுவு நிலைமை என்னும் நண்புடைத்தாதியால் மெய்யறிவு என்கின்ற செய்யொளிர் மனையில் வளர்க்கப்பெறும் இவளது எழில் நலனும் இளமை வளனும் கருதிக் கற்பனை இவளுக்குத் தோழியாக அழைக்கப்பெறுகின்றாள்.

இனி புலவர் பாலசுந்தரமவர்கள் தமது "புரவலருள்ளம்" என்னும் நாடக நூலுள்,

'உண்மை தோய்ந்த
உணர்ச்சி கவிக்குயிராகும் கருத்தே கண்ணும்
இசையே நன்முகமாகும் எதுகைமோனை
இயன்றுசெலும் கால்கள் அணிஉடம்பாம் மற்ற
அசையொடுசீர் தளையிவைகள் தோளும் கையும்
ஆகுமென்று பெரும்புலவர் கூறுவார்கள்"

என்று பாடி அக்கவிதையெனும் கட்டழகியின் உருவநலனை நம்முள்ளே மருவச்செய்கின்றார்.

காலத்தால் படைக்கப்படுகின்றவனும், காலத்தைப்படைக்கின்றவனுமாகிய கவிஞனது கவிதை அவனது உள்ளத்துடிப்பையெல்லாம் தெள்ளத்தெளியப் புலப்படுத்துகின்றது. அவனது கவிதைகளில் உணர்ச்சி பொங்கித் ததும்பிப் பயில்வாருளத்தில், துடிப்பு, இன்பம், துயரம் ஆகிய பண்புகளைத் தோற்றுவிக்கின்றது. அவன் பாடுகின்ற பாடலில் சொல்லாடும் பொருளாடும் அவற்றையெல்லாம் ஊடாடி ஒரு அழகு ஆடும். பா அதன் புனைவு முறையாலோ அன்றிப் புனைதற்குப் புலனாகிய பொருளாலோ அன்றி அதனூடே மிளிர்கின்ற அழகாலேயே சிறப்பை எய்துகின்றது. இதனையே மேலைநாட்டுப் புலவர்களும் பாநலமெனக் கருதுகின்றனர். (The object of poetry is neither truth nor edification but beauty). சிறந்த கவினது

உள்ளத்தே சுரந்து எழுகின்ற கவிதைக்குரிய பொருள் யாதா யிருப்பினும் அதனுள்ளே உண்மைதோய்ந்த உணர்ச்சியும், இன்பமும், கற்பனையும் ஒன்று சேர்ந்து முழக்கமிடும்! இதோ ஒரு புலவன் நாட்டின் எல்லையைப் பாட்டிலே தீட்டுகின்றான். காண்மின்!

"நீலத்திரைக் கடலோரத்திலே நின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றமிவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு!"

அழகுகொழிக்கும் குமரிமுனை ஆழ்கடலின் ஓரத்திலே அருந் தவம்புரிகின்றதாம்! எற்றுக்கு? 'எம் அன்னாய்! பஃறுளியாற் றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொண்டது! எம் எஞ்சிய தமிழகத்திற் கிடுக்கண் ஏதும் வாரா வண்ணம் காப்பாயாக' என்று வேண்டிக்கொள்ளத்தான் போலும்!

'யாழும் குழலும் பல பறையும், நூலும், மகளிராடரங் கமும் தாழ்வறு பொருள்கள் பலப்பலவும் கொண்டொளித்த கொடுங்கடல் ஓரத்தில் நிற்பது மண்ணால் அமைந்த எல்லை யாகவா காண்கின்றோம்! உயிர்தாங்கி உணர்ச்சி வடிவாய், இரவும் பகலும் என்ஞான்றும் ஊனும் உறக்கமும் யாவுமின்றிக் கடப்பாடு வழுவாமல் காக்கின்ற ஓர் உயிர்பெற்ற ஒப்பற்ற வடிவையன்றோ காணுகின்றோம்!

பின்னும் பாடுகின்றான் புலவன்.

"வடமாலவன் குன்ற மிவற்றிடையே புகழ்
மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு"

ஆம்! அலைகடல் கிழித்துப் பலகலமோட்டிச் சாவகம், சீனம், ஈழம், கடாரம் இன்ன பிறநாடுகளுக்கெல்லாம் கன்னல் தமிழ்ப் பெருமைபாடிச்சென்று வாணிகம் பேணியும், நாடடிப்படுத்தி யும், கலை வளர்த்தும், தொழில் செய்தும் ஓயாமல் ஒழியாமல் கொண்டுவந்து கொட்டினார்கள் புகழ்ச் செல்வத்தை! வட மாலவன் குன்றிற்கும் வண்ணக்குமரிமுனைக்கும் இடைப்பட்ட நிலம் அப்புகழ்க் கருவூலம்! பாடுகின்ற புலவனது உள்ளத்தில்

பண்டைய பெருமைகளெல்லாம் வெள்ளித் திரையிலோடும் வியன்படமாக ஓடுகின்றன. எனவே தான் பாடுகின்ருன். நாவினிக்கக், கருத்தினிக்க, இதனை உணர்ச்சியோடு பாடிப் பார்மின்! பண்டைப் பழந்தமிழ்ப் பெருமையநுமை நினைவு களெல்லாம் நும்முளத்தைத்தேடிவந்து தூண்டிவிடும்!

இதே எல்லையைப் பொருளாகக் கொண்டு இன்தமிழ்ப்பாப் புனைந்தோர் பல்லோருண்டு. "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம்" எனப்பனம்பாரனுரும்; வேங்கடங்குமரி தீம்புனற் பௌமென்றிந்நான்கெல்லை தமிழது வழக்கே' எனச் சிக்ண்டியாரும், வடக்குந் தெற்குங் குடக்கும் குணக்கும், வேங்கடம் குமரி தீம்புனற்பௌமென் றந்நான் கெல்லை யகவயிற் கிடந்தநூலது முறையே வாலிதின் விரிப்பின்' எனக் காக்கைபாடினியாரும், குணகடல் குமரிகுடகம்வேங்கடம் எனுநான்கெல்லையுளிருந்தமிழ்க்கடலுள்' என்று நன்னூ லாரும் பாடியுள்ளனர். ஆயின் பயில்வாருளத்தே முன்னைப் புலவனது பாடலே நின்றுலவுகின்றது. அதற்குப் பொருட்டாக வுள்ளது ஆண்டு நாம் காணும் உணர்ச்சியும், கற்பனையும், அழகுமேயாம். அவனது பாடலைப்பாடும்பொழுது நாட்டுணர்வு பெருகுகின்றது. ஒரு புலவன் அவன் பாடுகின்ற பாடல் நெஞ்சை எவ்வுருவில் தூண்டுகின்றது என்பதனுலேயே அறியப் படுகின்ருன் என்ற மேலை நாட்டுப் புலவர் கருத்தும் ஈண்டு நோக்குதல் நன்ரும் (Great poets are judged by the frame of minute they induce).

வடிவால் ஒத்திருக்கின்ற இயல்பினுலேயே பாட்டெல்லாம் ஒரு நீர்மையவாகக் கருதப்படமாட்டா. எல்லாச் செய்யுட்களும் பாட்டாகமாட்டா! மரத்தால் மனித வுருவம் ஒன்று செய்யப் படுகின்றது. அது மனிதனையொப்ப கண்ணிரண்டும், காதிரண் டும், காலிரண்டும், வாயொன்றும், மூக்கொன்றும், வயிறென் றும் பெற்றிருக்கின்றது. இன்னணம் மனித வுறுப்புக்களை யெல்லாம் மருவியிருப்பினும் அதனை மனிதனென யாரும் கருதார். மனிதனுக்குரிய உயிர், பண்பு, ஆகிய ஒப்பற்ற இயல்புகள் அம்மரவுருவில் காணுதல் கூடுங்கொல்லோ! இயலா தன்றே! (வளரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

பண்பு.

சிவா.

அல்லி கூடத்துக் கட்டிலில் படுத்தபடியே நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அதற்குள் அவள் அம்மா 'இரவெல்லாம் வலியினுல் தூங்கவே இல்லை தம்பி! விடியற்காலையில்தான் கண் ணயர்ந்தாள்' என்று கூறினர். அவள் கண் வளரும் அழகை அணு அணுவாகச் சுவைத்துக் கொண்டிருந்தேன். தங்கச் சிலை ஒன்று கண்மூடி ஏதோ இன்பக் கனவுலகில் மூழ்கியிருப்பது போன்றிருந் தது அவள் தூங்கிய நிலை. அதற்குள் அவள் கண் மலர்ந்தாள். எதிரே என்னைக் கண்டதும் வியப்பு கலந்த இளநகை அவள் எழில் முகத்திலரும்பியது.

"இன்று நல்ல முகத்தில்தான் விழித்திருக்கின்றேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

"ஏன்? இத்தனை நாளாக ...... என்றேன் நான்.

"எனக்கு மிகவும் பிடித்த முகம்" என்று கூறித் தலை கவிழ்ந் தாள்.

"அல்லி! கால் எப்படி யிருக்கிறது?

"கொஞ்சம் வலிக்கிறது.

அப்போது அவள் அம்மா கையில் காப்பியுடன் நுழைந்தார். பேச்சுக் குடும்பத்தைப் பற்றித் திரும்பியது. அல்லியின் அப்பாவும் தம்பியும் ஒன்றரையாண்டுகட்கு முன்னர்தான் உயிர் நீத்தனராம். அளவோடு வாழ்கின்ற அவர்கள் வாழ்க்கைக்கு, ஆண்டுதோறும் வருகின்ற நில வருமானம் போதுமானதாக யிருக்கிறதாம். இனி மேல் இருப்பதெல்லாம் அல்லியின் திருமணத்தைப்பற்றிய கவலை தானும், இவைகளைச் சொல்லும்போது அஞ்சலையம்மாளின், அதுதான் அல்லியுடைய தாயின் பெயர், கண்கள் கலங்கின.

அல்லியின் காற்புண், ஏறக்குறைய இரண்டு கிழமைகள் அவளைப் படுக்கையில் கிடத்தி விட்டது. மான்குட்டிபோல அவளால் துள்ளி ஓட முடியாவிட்டாலும், அன்னம்போல அசைந்தாடி நடக்க

ஆரம்பித்தாள். நானவள் வீட்டிற்குச் சென்ருல் அவள் என்னெதிரே நின்று பேசுவதில்லே. அறைக்கதவு ஓரத்தில் நின்றுகொண்டு, பாதியுடல் என் பார்வையிற் படும்படியாகத்தான் பேசுவாள். அவள் கதவருகே இருந்து முகத்தை மாத்திரங் காட்டி மேனி மறைய நிற்பது, தாமரை தன் மலரைக் காண்போர்க்குக் காட்டித் தண்டைத் தண்ணீர்க்குள் மறைத்திருப்பதுபோலத் தோன்றும். எப்போதும் மறைப்பிற்குத்தானே அதிக ஆற்றல் இருக்கின்றது. ஆண்களேப் போலவே பெண்களும் அடக்கவொடுக்கமின்றிக் கைவீசித் தெருவிலே நடக்க ஆரம்பித்தால் பின் அவர்கட்கு அவ்வளவு மதிப்பிருக்காது; பெருமையுந்தான் ஏது?

அல்லியைத் தனிமையில் சந்தித்து என்னுள்ளத்துணர்ச்சியை யெல்லாம் கொட்டவேண்டுமெனும் எல்லேயற்ற ஆர்வம் என்னுள் நாள்தோறும் பெருகி வளர்ந்துகொண்டே வந்தது. எனக்கு மவளுக்குமிடையே கண்ணிற்குத் தெரியாத ஒன்று இயங்கி என்னே அவளோடு பிணேத்தது. அவளே ஒருநாள் காணுவிடினும் ஏதோ ஒன்றைப் பறிகொடுத்ததைப் போலத் தோன்றும் என்னுணர்ச்சி களேயெல்லாம் உள்ளடக்கிப் பிறர் ஐயுருவண்ணம் நடந்து கொண்டேன். என்றும்போல ஒருநாள் மாலே அல்லியின் வீட்டிற்குச் சென்றேன். அல்லியின் அம்மா கோயிலுக்குச் சென்றிருந்தார். அவள் மாத்திரம் தனியே இருந்தாள். அவள் எப்போதும் போல ஒளிந்து நிற்காமல், என்னெதிரே, சுவரில் சாய்ந்திருந்தாள். அவள் கைகள் முன்பக்கம் இழுத்துவிடப்பட்ட சடையின் நுனியைப் பின்னிக்கொண்டிருந்தன. நான் ஊஞ்சலில் உட்கார்ந்தேன். இருவருக்குமிடையே சிறிது நேரம் அமைதி நிலவியது. அந்த அமைதியே என்னுள்ளத்தில் புயலேத் தோற்றுவித்தது. உணர்ச்சி வெள்ளம் கரையை மீறியது. இருப்பினும், அச்சமுந் தயக்கமும், என் மனத்தைத் தாக்கின. எது வரினும் வரட்டும் என்ற உறுதி யோடு உள்ளத்துணிவெல்லாம் ஒன்றுசேர்த்து அவளோடு உரையாட முற்பட்டேன்.

'அல்லி! நான் உன்னே ஒன்று கேட்கட்டுமா? தவருக என்னே நினேக்கமாட்டாயே!' என்று முதலில் அடிப்படையை வலுவாகப் போட்டுக்கொண்டேன்.

'நீங்கள் தவறு செய்யமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. என்னிடம் கேட்க உங்களுக்கேனிந்தத் தயக்கம்?' என்று என் நெஞ்சத்தை அறிந்தாள்போல மறுமொழி அளித்தாள் அவள்.

'அல்லி! சிறுவயதிலே நாம் அப்பா—அம்மாவாக விளையாடியது உனக்கு நினைவிருக்கிறதா?'

'மறந்துவிடுவேன் என்று நினைத்தீர்களா? அது என் நினைவை விட்டு நீங்கவுமில்லை. அந்நிகழ்ச்சியை என்னெஞ்சம் மறக்கவுமில்லை', வெட்கத்தால் அவள் கன்னங்கள் அந்தி வானத்தின் வண்ணம் பெற்றன.

'அதைப்போன்று..........மேலே என்னால் பேசமுடியவில்லை. தொண்டையை ஏதோ ஒன்று அடைப்பதுபோன்றிருந்தது.

'அதைப்போன்று.........' அவள் சிரித்தாள். அந்தச்சிரிப்பு என் கோழைத்தனத்தைப் பார்த்து ஏளனம் செய்வதாக எனக்குப் பட்டது. உடனே என்மனம் உரம்பெற்றது. சொற்களை என்வாய் உதிர்த்தது.

அதைப்போன்று, இல்லற ஆட்டத்திலும் நாம் வாழ்க்கைத் துணைவர்களாக வாழ்ந்தால் நமது எதிர்காலம் பூத்துக்குலுங்குந் தேன் மலர்ச்சோலையாக ஆகுமல்லவா?'

அப்படி நேர்ந்தால்...........

அப்படி நேர்ந்தால்...........ஏன் நிறுத்திவிட்டாய் அல்லி? பேசு, உன் எண்ணத்தை ஒளிக்காது பேசு அல்லி!

அப்படி நேர்ந்தால் நான் எவ்வளவோ கொடுத்துவைத்தவள்! அவள் தலை தானே நிலம் பார்த்தது.

நீ மட்டுமன்று, நானுந்தான்......அல்லி! என்னைக் கொஞ்சம் நிமிர்ந்துதான் பாரேன் என்றேன் நான். வெட்கம் மேலிட, ஆசை அலைமோத அவள் தலை நிமிர்ந்தாள். இதற்குமுன் கற்றறியாத காதல்கலையை அவள் கண்களிலே கண்டேன். நாணமும், ஒரு வகை அச்சமும் கொண்டு அவள் கண்கள் ஆயிரமாயிரம் பேசின. இதை அநுபவித்துத்தான் வள்ளுவப்பெருந்தகை, வாய்ச்சொற்களை விட கண்பேச்சிற்குத்தான் ஆற்றலதிகமெனச் சொல்லி யிருக்க வேண்டும். நான் என்னை மறந்து அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் என்னையும் தரையையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள். திரைப்படக் காட்சிகளின் சுவையான கட்டத்தில், வேண்டாத பகைவன் வருவதுபோல அல்லியின் அம்மா அப்போது நுழைந்தார். (தொடரும்).

சென்ற இதழின் தொடர்ச்சி.

கரந்தைக் கோவை.

[வித்துவான் ச. பாலசுந்தரம்.]

காதலன் தலைவி மூதறிவுடைமை மொழிதல்

91 ஆளுந் திறனும் அறிவியல் நூல்செயும் ஆக்கமுமெந்
நாளுந் தமிழ்மொழிக் கில்லையென் பாரின் நவையுரைபோல்
காளம் பொருவிழி யாலமிழ்தூட்டிக் கரந்தையிலென்
நீளும் உயிரினைப் பேதைமை ஊட்டவும் நேர்ந்தனையே!

பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறுதல்

92 தெரியாத ஊர்க்கு நெறிகேட்ப துந்தமிழ்ச் செய்யுளுக்குப்
புரியாத போதுரை கேட்பது மாகும் புணர்ந்துயிரிற்
பிரியாத மாதரைப் பெற்றிடற் கோர்துணை பெட்பதெவன்?
திரியாத செந்தமிழ்ச் சீர்கரந் தைப்புனம் சேருகவே.

தன்னிலை தலைவன் சாற்றல்

93 என்னு லடைவதற் காகுமென் றுலும் இருநிலத்தில்
பொன்னல் விரும்பும் பிறபொருட் கொள்ளுதல் போல், வருந்தும்
மின்னற் பொலியிடை மானைக் கரந்தையின் மெல்லியலை
உன்னற் பெறவிழைந் தேனுயிர்ப் பாங்கி உதவுகவே.

பாங்கி உலகியல் உரைத்தல்.

94 பயிலா தவர்மொழிப் பாங்கறி யாதவர் பைங்கரந்தைக்(கு)
அயலான வர்தமிழ்த் தீஞ்சுவை எங்ஙன் அருந்துவர்? நீ
மயலான் மங்கையை மர்தவர் முன்னே மணந்துகொளல்
செயலாவ தன்றிவே றிவ்வுல கோரியல் தேறலனே.

தலைமகன் மறுத்தல்.

95 வாட்டும் பசிப்பிணி உற்றுர் தமக்கு வயற்பயிரைக்
காட்டுங் கருணையைப் போன்றுரை யாடினை காரிகையாய்
ஈட்டுந் தமிழ்ச்சுவை நூலார் கரந்தையில் என்னுயிரை
வாட்டுந் துயர்களை வாய்முனம் பின்னர் வரைகுவனே.

---

91 காளம்—நஞ்சு—நீளும் உயிர்—தலைவி.
92 பெட்பு—விருப்பு.

பாங்கி அஞ்சி யச்சுறுத்தல்.

96 காற்றுப் புகுங்கதி ரோன்புகும் இம்மலைக் கானவர்வில்
ஏற்றுப் புகுவரல் லால்கரந் தைத்தலத் திப்புனத்தில்
வேற்றுப் புலத்தவர் உட்புகல் இல்லைசெவ் வேளையொப்பத்
தோற்றிப் புகுமுனை எம்மவர் காணின் துயர்தருமே.

தலைவன் கையுறை புகழ்தல்.

97 பேணப் புகழ்தரும் பீடார் கரந்தைப் பெருவரைமேல்
காணக் களிப்புநங் கைதொடக் காதலும் கச்சிறுகப்
பூணப் பொலிவுமெப் போதும் பொருந்துமிப் பூந்தழையை
ஆணத் துடனணி வீரரி தாமிவை ஆரணங்கே.

பாங்கி கையுறை மறுத்தல்.

98 சொல்லாத வாய்மொழி தோயாத நீத்தம் சுவைகருதி
நில்லாத பாவிவை நேரினும் நேயக் கரந்தையினில்
இல்லாத தொன்றெமக் கெங்கே இசைந்ததென் றெண்ணியெமர்
பொல்லாத சூழ்வரிப் பூந்தழை எம்மிடைப் பூண்பரிதே.

ஆற்ரு நெஞ்சினேடு டவன்புலத்தல்

99 தஞ்சம் எனத்தழை தாங்கிவந் தாய்செந் தமிழினியல்
அஞ்சும் வளர்ப்பவர் ஆள்வார் கரந்தை அரிவையிடம்
நெஞ்சந் திறந்தழல் நீளெரி காட்டியும், நெக்குருகிக்
கெஞ்சும் மொழிகிளர்ந் தேத்தியும் கேளலர் கேளலரே.

பாங்கி தலைவனை ஆற்றுவித்தல்.

100 கேளாத கேளலம் ஆதலின் கிட்டிநும் கேண்மையுடன்
தாளாத தன்மையும் சாற்றித் தலைவியின் சால்பறிவேம்
நாளாத லன்றதும் நாளையே யாமிதை நன்கணிந்தே
ஆளாத லாக்குவம் அஞ்சேல் கரந்தையின் ஆண்டகையே.

---

97 பீடார்—பெருமையமைந்த. வரை—மலை. கச்சு—முலைக்கட்டு, எப்போதும்—எல்லாக் காலத்தும், எல்லா மலர்களும். ஆணம்—அன்பு.

98 தோயாதநீத்தம்—படிந்தாட முடியாத நீர்நிலை. எமர்—எம்மவர். பொல்லாத—தீங்கான செயல்கள்.

99 அஞ்சு—ஐந்து (போலி) கேளலர்—உறவில்லாதவர்—கேட்கமாட்டார்.

100 கேளாத—எம்மியல்புக்குமாறுகும் கேட்கப்படாத செய்திகளை. கேளலம்—கேட்கமாட்டோம். தாளாத—தாங்குதற்கியலாத ஆளாதல்—உன் விருப்பிற்கிணங்க.

இரந்துகுறைபெறாது வருந்திய கிழவோன்மடலே பொருளெனமதித்தல்

101 ஈயென் றிரத்தல் இழிவென் றுரைக்கும் இனியதமிழ்த்
தாயொன்றி வாழ்கரந் தைப்புனத் தையல்முன் தந்தபிணி
போயென் றொழியுமென் றேங்குநெஞ் சேபுகழ்ப்
போந்தையுடன்
வீயொன் றெருக்கென்பு வெந்தன வோவினை வேறிலையே.

பாங்கிக் குலகின் மேல் வைத்துரைத்தல்.

102 நீரிற் கலப்புறும் நெய்போற் பிறமொழி நேரினுந்தன்
சீரிற் றிரிதலில் லாதநற் செந்தமிழ் சேர்கரந்தை
ஊரிற் பிறந்தவர் ஒண்டொடி யோர்தரும் ஊறகல
நாரிற் றொடுத்தணி வாரெருக் கேறுவர் நாண்மடலே.

அம்மட லேற்றினைத் தலைவன் தன்மேல் வைத்துச்சாற்றல்.

103 வீரம் மறங்கொடை வேந்தமைச் சர்நெறி வீறுடன்தே
வாரம் மிகுதமிழ் வாழுங் கரந்தையில் வார்குழலீர்!
சேரன் பகைகொளச் செல்லுவன் நாளை சிவவடிவோ(டு)
ஈரம் இலாநுமுன் ஏகுவன் என்போ டெருக்கணிந்தே.

பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல்.

104 இல்லா விடையும் இருள்தருங் கூந்தலும் ஏர்மதியும்
வில்லார் குவளையும் விளையாத முத்தமும் வேயுடனே
எல்லாம் எழுதுவை ஆயின் கரந்தை இருந்தமிழ்போற்
சொல்லாம் அமிழ்தினை எவ்வா றெழுதுமுன் தூரிகையே

இதுவுமது.

புலந்தரு நாவலர் போற்றும் கரந்தையிற் பொன்னனையாள்
கலந்திகழ் நல்லெழில் தீட்டக் கருதுமுன் கைக்கிழியில்
சிலம்பொடு மேகலை சிந்தா மணித்திருக் கோவை யன்றி
வலந்திரு வாசகவண்ணநீ தேர்ந்து வரைவரிதே.

---

101 போந்தை—பனைமரம். வீயொன்றெருக்கு—மொக்கின் தன்மை யோடு கூடிய எருக்க மலர்.

102 மடல்—மடன்மா.

103 சேரன்பகை கொளல் — அவனுக்குரிய பனையை வெட்டுதல், சிவவடிவு—நீறுபூசி எருக்கணிதல்.

104 ஏர்மதி — நெற்றி முகமும் ஆம், வில்லார்குவளை — புருவமும் கண்ணும், முத்தம் — பற்கள், வேய்—தோள், தூரிகை — வண்ண எழுதுகோல், கோவை — உதடும் — மாலையுமாம். திருவாசக வண்ணம்-திருவாசகத்தின் உட்பொருள். பேச்சினை எழுதும் ஓர் திறம்.

தலைமகன் தன்னைத்தானே புகழ்தல்.

105 உள்ளத் திருப்பதை ஓவிய மாக்குதல் ஒல்லுமெனல்
எள்ளத் தனையும்பொய் இல்லைஎன் நெஞ்சும் எனதறிவும்
கொள்ளத் தரினெளி தாங்கிழி தீட்டுதல் கோகநக
வள்ளத் திருப்பவள் வாழ்கரந் தைப்பதி வாணுதலே

பாங்கி அருளியல் கிளத்தல்.

106 கரும்பார் கவிவளங் காணுங் கரந்தையிற் கற்றநம்பி!
பெரும்பாவ மாஞ்சினை அன்றிற் பெடைக்குப் பிழைபுரிதல்,
இரும்பாம் மனத்தவர், இன்றமிழ்க் கேளார் இவர்களன்றி
விரும்பார் ஒருபெண்ணை வேண்டிமற் றோர்பெண்ணை
வெட்டுதற்கே.

கொண்டுநிலை கூறல்.

107 தன்குறை சார்ந்தழத் தாய்தரும் பாலெனின், தண்டமிழால்
நன்குறை சீர்கரந் தைத்தமிழ் நம்பி! அந் நங்கையிடம்
நின்குறை சென்றுரை நேரா விடிற்பினர் நீள்பனையை
முன்குறைத் தம்மடல் கொண்டே முடிக்க முயலுகவே.

தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற் குரைத்தல்:

108 கற்றுரை வாழ்வளித் தேத்துங் கரந்தையிற் காவலனே!
பெற்றுரை யின்றிப் பிறருணர் பெற்றியில் பேசகிலாள்
சிற்றுடை யின்றிநூற் சீலை உடுத்துமோர் சீரறியாள்
எற்று லுனைவருத் தும்எழில் முற்றுத ஏந்திழையே.

தலைவன் தலைவிவருத்திய வண்ணமுரைத்தல்.

109 ஐசேர் குமரசா மித்தகை தொண்டால் அருள்சிறக்கும்
மெய்சேர் தமிழ்க்கரந் தைப்புனம்மேவிய மெல்லியலே!
பைசேர் அராச்சிறி தாயினும் பல்விடப் பான்மைகொளும்
மைசேர் விழிமட வாள்வருத் தாளெனல் மாண்பிலையே.

---

105 கோகநக வள்ளம் — தாமரை மலராகிய கிண்ணத்திருப்பவள் திருமகள்.

106 பெண்ணை—பனைமரம்.

107 பனைமரத்தைக்குறைத்து மடன்மாஏறு—பனைஓலைநறுக்கில்கடிதம் எழுதி நின்குறையை முடித்துக்கொள் என்பது வேறுபொருள்

108 பெற்றோர் உணர்வது—மழலைச்சொல்.

109 ஐ—தந்தையார் பெயரின் முதலெழுத்து. தலைமையும்—பெருமையும் வேறுபொருள். அரா — பாம்பு. கடுகுசிறுப்பினும்—சிறிய அளவினதாக இருப்பினும் என்றபடி. உலக வழக்கில் பெருத்துச் சிறுமையுற்றதற்குக் காட்டப்படும், முடுகுதழல் என்க.

இதுவுமது.

வடுகு துளுமலை யாளம்வழங்கிய வான்தமிழை
நெடுக வளர்ப்பவர் நேரும் கரந்தை நெரிகுழலாய்
கடுகு சிறுப்பினும் காரம் குறையுமோ? காரிகையாள்
முடுகு விழித்தழல் மொய்ம்போ டறிவை முறுக்கியதே.

பாங்கி தலைமகள் செவ்வி யருமை செப்பல்.

110 உரைமேவு தஞ்சையில் ஓங்குங் கரந்தையின் ஒண்டமிழ்போல்
வரைமே லகவலும் வந்தார் கலித்துறை வண்டலொடு
விரைமேம் படுமலர் வெண்பாவை யும்வஞ்சி வேண்டலளெம்
அரைசேயுன் அன்படி யாள்சொலுஞ் செவ்வி அறிந்திலனே,

இதுவுமது.

நற்றாய ரின்பின் நலஞ்சேர் செவிலி நவம்புரியும்
குற்றேவல் நங்கையும் கூடிப் புரக்குமெங் கோமகளைச்
சற்றேனும் யான்றனிக் காணுதல் சாலாத் தமிழ்க் கரந்தை
உற்றாயும் நற்கலை கற்றாயுன் அன்புரை ஓதுதற்கே.

தலைவன் செவ்வி எளிமை செப்பல்.

111 சைவப் பனசை தரும்பரி சாயிரம் தண்டமிழால்
கைவரக் கேட்குங் கரந்தைமா ணுக்கரின் காரிகை!போய்
கைவரும் பூந்தழை காட்டியென் பேருரை கண்டவுடன்
மைவரும் கண்ணி மகிழ்ந்தணைத் தேயுனை வாழ்த்துவளே.

பாங்கி என்னைமறைத்தபின் எளிதென நகுதல்.

112 வாயறி யாதுண நாவிழைந் தாங்கென் வனமயிலைப்
போயணை வாமெனக் கொண்டாய், கரந்தையிற் பூந்தமிழ்நூல்
நியறி யாததொன் றில்லைஎன் னின்றி நிகழ்வுறுமோ?
தாயறி யாதசூ லுண்டோ தரணியிற் சாற்றுகவே.

---

110 வரைமேலகவல் — சிலம்பெதிர் கூவுதல், ஆர்கலித்துறை — கடற்றுறை. வண்டல் — விளையாட்டு, மலர்வெண்பாவை — வெள்ளிய மலர்களால் சமைக்கும் பாவையுரு. செவ்வி—தனித் திருக்குங்காலம், இதனுள்—அகவல், கலி, வெண்பா, வஞ்சி, என்ற பாக்களும் 'துறை' என்ற இனமும் வந்தன. நவம்புரியும்— அழகுபடுத்தும்.

111 பனசை—திருப்பனந்தாள், பரிசு—ஐந்தாம் சார்ஜ் ஞாபகார்த் தத்தமிழ்ப்பரிசு, இன் உவமஉருபு, காரிகை—அண்மைவிளி.

அந்நகை பொருதவன் புலம்பல்.

113 துளிநோக் கிலாதவோர் துன்பப் பயிரினைத் தூர்பறித்து
வெளிநோக் கிலாதவர் வெந்நீரை விட்டு வெதுப்புதல்போல்
நளிநோக் கமைதமிழ் நல்குங் கரந்தையின் நாண்மடவோய்
அளிநோக் கிலாநகை யாலென் தாவி அணங்கினையே.

பாங்கி தலைவனைத் தேற்றல்.

114 மின்னுகு மெல்லிடைப் பாங்கியர் தாம்பலர் மேவிடினும்
என்னுவி யன்னவட் கியானுவி யாதலின் என்னுரையைப்
பொன்னுக ஏற்றருள் செய்வாள் கரந்தையிற் பொங்குதமிழ்
மன்னுக வந்தநல் வள்ளால்! மனத்துயர் மாற்றுகவே.

பாங்கி கையுறை ஏற்றல்.

115 பாடத் தழைக்குநற் பண்பார் கரந்தையிற் பைந்தமிழைக்
கூடத் தழைத்தொளி கொள்பா வலர்போல் குரிசிலின்கை
நீடத் தழைக்குமிந் நற்றழை யாவுமந் நங்கையுடல்
சூடத் தழைக்குமிங் குள்ளந் தழைக்குமித் தோன்றலுக்கே.

கிழவோனுற்றல்.

116 மன்னி வருந்தமிழ் மாண்பார் கரந்தை மலையிடத்தில்
மின்னி இடித்துக் கருத்தமிழ் தந்தரும் மேகமெனக்
கன்னி நகைத்துரை காட்டியென் னுள்ளங் கலக்கியபின்
முன்னி யருள்புரிந் தாளிவட் கென்னே முதுக்குறைவே.

இதுவுமது.

திண்மை அறநெறி தேர்ச்சி ஒழுக்கம் திகழ்வதற்கா
வண்மை மிகுதமிழ் வாழுங் கரந்தைநன் மாணவர்பால்
கண்மை இலாதவர் போல்நடக் குங்கணங் காயரென
உண்மை அருளுடை யாளுரை யாலெனை ஓர்ந்தனளே.

---

113 துன்பப்பயிர் — வாடுகின்ற பயிர்ச்செடி, தூர் — வேர், வெளி நோக்கிலார் — பரந்த உள்ளமில்லாதவர், நளி — பெருமை அளி — அருள்.

115 சூட நங்கை உடல் மேலும் தழைக்கும்—இத்தலைவன் உள்ளமும் தழைக்கும் என்றாள்.

116 முதுக்குறை — அறிவு - திகழ்வதற்காக வேண்டி, கண்மை — கண்ணோட்டம், கணக்காயர்—ஆசிரியர், ஓர்தல்—ஆராய்தல்

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி

இலக்கியம் (1)

இரா. இளந்திரையன், B. A. (Hons.)

அழகே உருவான ஒரு பெண்ணின் உருவம் அது. அப்பெண் அவனை நோக்கி வந்துகொண்டிருந்தாள் அவன் அவளைப் பார்த்தான். ஐந்து பேரறிவையும் கண்களே கொண்டன. புன்னகை தவழும் அப்பொன்முகம் அவன் கண்வழிப் புகுந்து கருத்தை என்னவோ செய்தது. கண்டான்; உணர்ந்தான்; மகிழ்ந்தான்; தன்னையே மறந்துவிட்டான். இறுதியில் தூங்கியே விட்டான்! விழித்துப்பார்த்தபோது அங்கே அந்தப் பெண்ணைக் காணவில்லை. அவளைக்கண்ட காட்சியை மனத் திரையில் கொண்டுவந்தான். இன்ப உணர்வு எல்லைமீறிப் பொங்கியது. பெண் என்னவோ இயற்கை எழிலில் திளைத்த அவன் உள்ளம் கற்பித்துக்கொண்ட மனப் பிரமைதான். ஆயினும் அவளைக்கண்டபோது அவன்பெற்ற இன்பம் அளப்பரியது. அந்த இன்பத்தை எப்போதும் பெறமுடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணியது அந்த இழந்த உள்ளம். ஆனால் எப்படிப் பெறுவது என்பது அவனுக்கு எளிதில் விளங்குவதாக இல்லை. எங்கேயோ ஒரு பாறையில் போய் மோதித் தடைப்பட்டு நிற்பது போலிருந்தது அவனுக்கு ஆயினும் அவனது விழைவு அவனைச் சிந்தனையில் ஆழ்த்தியது. அவன் சிந்தனையின் ஆழத்திலேயே கிடந்தான். ... ...

இவ்வாறே, உள்ளத்தைக் கவர்ந்த ஒவ்வொன்றையும் நிலையாகப் பெறவேண்டும் என்ற ஆவல் மனித மனத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. இடையறாத அந்த இயக்கம் புதிய வழிதுறைகளைப் படைக்கும் ஊக்கமாக மலர்ந்தது. 'இன்றியமையாமையே படைப்பின் தாய்'— கட்டாயத் தேவையே புதியன படைக்கும் பண்பை உண்டாக்குகின்றது என்றெல்லாம் கூறுவார்களல்லவா? உள்ளத்தின் பேராவல் தூண்ட, தான் கண்டுணர்ந்த இன்பத்தை நிலைபெறடையச் செய்யும் முயற்சியில் இறங்கினான் மனிதன். கருவிகளைத் தேடி அலைந்தான். தேடித்தேடி அலைந்த மனிதன் இறுதியில் சில கருவிகளைக்

கண்டு பிடித்தான். அக்கருவிகளால் உள்ளம் கவர்ந்த ஒவ்வொன்றுக்கும் உருவம் சமைத்தான் மனிதன். அவ்வாறு சமைக்கப்பட்ட உருவங்களே '**கலை**' என்னும் பெயர் கொடுத்து அழைக்கப்பட்டன.

வண்ணத்தையும் தூரிகை திரைச்சீலை ஆகியவற்றையும் கருவிகளாகக் கொண்டவன் ஓவியமாகத் தீட்டினன், தனது உள்ளக்கருத்தை. கல்லையும் உளியையும் கைக்கொண்டவன் சிற்பமாக வடித்தான். இவ்வாறே பல கலைகள் பல்கிப் பெருகின. அவற்றுள் சொல்லையும் ஓசையையும் துணைக் கொண்ட மனிதன் கவிதை புனைந்தான்; உரைநடையை உருவாக்கினன்; நாடக நடையைத் தோற்றினன்; இசைநடையில் இதயத்தை இழைய விட்டான். அவை யாவும் '**இலக்கியம்**' என்ற பெயரால் அழைக்கப்பட்டன.

இனி, இலக்கியத்தின் பிறப்புக்கு அல்லது கலைகளின் தோற்றத்துக்கு வேறொரு காரணமும் உண்டு. உலகிடைத் தோன்றி வளர்ந்துவரும் உயிர் இனங்களில் சிலவற்றுக்குச் சிரிக்கத் தெரியும்; சிலவற்றுக்குப் பாடத் தெரியும்; சிலவற்றுக்கு யாதொன்றையும் மறவாது நினைவில் வைத்துக் கொள்ளத் தெரியும்; சிலவற்றுக்கு ஆடத் தெரியும். இவ்வாறாக உயிரினத்தின் ஒவ்வொரு பகுதியும் ஏதாவதொரு துறையில் உணர்ச்சி பெற்றுள்ளது. மனித இனம் மட்டும் மற்ற உயிர் இயல்புகளை எல்லாம் பெற்றிருப்பதோடு, கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றையும் இணைத்து எண்ணிப்பார்க்கும் ஆற்றலையும் பெற்றுள்ளது. இந்த ஆற்றலினல், வாழுகின்ற ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையைப் பற்றி எண்ணிப் பார்க்கிறான். வாழ்க்கையைப்பற்றிய அவனது எண்ணம் அவனையும் உலகிலுள்ள பிறரையும் ஒன்றாக இணைக்கின்றது. எனவே அவன் தன்னையும் தன் வாழ்க்கைப் போக்கையும் பற்றி மட்டிலும் எண்ணாது பிறருடைய வாழ்க்கை இயல்புகளினும் கருத்தைச் செலுத்துகின்றான். இவ்வாறு பல்வேறு இயல்புகளை உடைய பலரின் வாழ்க்கையை எண்ணி இணைத்துப்பார்க்கும் அவன் உள்ளம், எல்லோருடைய வாழ்க்கை

யையும் தொட்டுக்கொண்டு ஓடுகின்ற இயல்பு ஒன்றை— வேற்றுமையில் ஒற்றுமையைக் காணுகிறது. அஃதாவது மேற்போக்காகப் பற்பல வேறுபட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ள பலரின் வாழ்க்கை, அடிப்படையில் ஓர் ஒற்றுமைத் தன்மை பெற்றியங்குவதை அவன் உணருகிறான். இப்புதிய உணர்வு அவனுக்கு மட்டிலா மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. காலைக்கதிரவனின் புத்தம் புதிய எழிலைக் கண்டு களிகொண்ட உள்ளம் போலவும், மலைச்சாரலின் வனப்புணர்வில் திளைத்த மனப்பிரமை படைத்துக்காட்டிய பெண்ணுயிரோவியத்தைக் கண்டு பெருமகிழ்வெய்திய உள்ளம் போலவும் இவனுடைய உள்ளமும், இப்பொற்புறு புதுமையை அழியாததாக்கி வைத்துக்கொள்ள விரும்புகின்றது. அதைப் பலரிடமும் தெரிவித்து மகிழ விரும்புகின்றது. மனிதனிடம் அமைந்துள்ள கூடிவாழும் இயல்பு அவனை, இவ்வாறு, மற்றவர்களிடமெல்லாம் தன் உள்ளக்காட்சியை அள்ளித் தெளிக்குமாறு ஏவுகின்றது.

கூடி வாழும் பண்பு தந்த உந்துதலால், உள்ளத்துள் மலர்ந்த ஒளியை வெளியிடத்துடிக்கிறது மனித உள்ளம். எப்படி வெளியிடுவது? என்ற வினா, எழுச்சியுற்ற உள்ளத்தை எதிர்த்து நிற்கிறது. இந்த நிலையில்தான் உலகின் கலைஞர்கள் பல வகைகளாகப் பிரிகின்றனர். சிலர் பேச்சாளராகின்றனர்; சிலர் எழுத்தாளராகின்றனர்; சிலர் ஓவியராகின்றனர்; சிலர் சிற்பிகளாகின்றனர். இவ்வாறாக உள்ளத்திலுள்ள ஒளி பல வடிவங்களில் வெளியிடப்பட்டுப் பல்வேறு கலைகளாக நின்று நிலவுகின்றது.

இந்தக்கண்கொண்டு நோக்கும்போது உலகில் பிறந்துள்ள ஒவ்வொரு மனிதனும் கலைஞனாகவே நம் கண்முன்னர்க் காட்சியளிக்கிறான். இது முற்றிலும் உண்மையே. ஆனால் ஒவ்வொரு மனிதனிடமும் கலைஞனின் சாயல் உள்ளதே தவிர, முழுக் கலைஞனாக ஒவ்வொருவனும் மிளிர்வதில்லை. உலகிலுள்ள ஒவ்வொருவரும் வாழ்க்கையை எண்ணிப்பார்ப்பது உண்மையே ஆனாலும், வாழ்க்கையின் ஆழத்தில் புதைந்து கிடக்கும்

அடிப்படை ஒற்றுமைகளை எல்லாரும் அறிந்து கொள்ளுவதில்லை. அவ்வேற்றுமைகளைச் சிலராலேயே, அவர்களுக்குச் சில தகுந்த வாய்ப்புக்கள் கிடைத்துவிடுவதனால் கண்டறிய முடிகின்றது. இதுபோலவே உலகிலுள்ள உருவ அருவப் பொருட்களுள்ளும், அவற்றின் இயக்கங்களின் ஊடேயும் மறைந்து கிடக்கும் அடிப்படை இயல்பைச் சிலராலேயே அறியமுடிகின்றது. அவ்வியல்புகள்தாம் உலகிலுள்ள பெரும்பான்மையான மக்களைக் கவரமுடியும்; அவைதாம் அவர்களின் எண்ணம், மொழி, செயல்களில் மாறுதல்களையும் வளர்ச்சியையும் உருவாக்க முடியும். ஆதலினால்தான் அத்தகு, ஆழ்ந்த அடிப்படை உணர்ச்சிகளையும் இயல்புகளையும் உணர்ந்து வெளியிடுவோர் மாத்திரம் கலைஞர் என்று போற்றப்படுகின்றனர். அவர்களின் படைப்பு கலை என்று சிறப்பிக்கப்படுகின்றது. எனவே எல்லாரிடமும் கலைப்பண்பு இருப்பினும், சூழ்நிலைகளின் காரணமாக, ஒரு சிலரின் கலைப்பண்பு மட்டும் தக்க முறையில் பயன்படுத்தப்பட்டு வளர்ச்சியும் அடைகின்றது. ஏனையோரின் கலைப்பண்பு கலைஞரின் படைப்புக்களை உணர்ந்தனுபவிக்க மாத்திரம் துணையாக இருக்கிறது.

இனி, பல கலைகளுள்ளும் இலக்கியம் தனிப்பட்ட இடத்தை வகிக்கின்றது என்பர். பிற கலைகளுக்குத் தனித் தன்மைகள் இருப்பது போலவே இலக்கியத்துக்கும் தனித் தன்மைகள் உண்டு. ஆயினும் கலைகள் யாவுமே அடிப்படை ஒப்புமை உடையனவாயிருப்பதால் சமநிலையில் வைத்து எண்ணத் தக்கனவேயாம். எனினும் இலக்கியத்திற்குத் தனிச் சிறப்பு ஒன்று உண்டு. இலக்கியத்துட் பொதிந்துள்ள கருத்தும் சுவைஞரின் உள்ளமும் ஒன்றவேண்டுமாயின், அக்கருத்தை ஓரளவாயினும் கற்பனை செய்யக்கூடிய கலைப்பண்பு சுவைஞரிடம் இருக்கவேண்டும். அப்பண்பு இலக்கியக் கருத்தை எளிதில் தழுவிக் கொள்ளுதற்கு, நாம் நாடோறும் பேசிப் பழகிய சொற்கள் — அவ்விலக்கியத்தினைத் தாங்கியுள்ள சொற்கள் நமக்குத் துணைபுரிகின்றன.

(தொடரும்)

பாரி.

ச. பாலசுந்தரம்.

காட்சி 4.

அமை 2: அரசர்தம் வழிக்கது அமை தியாகுமோ?
குரைகடல் சூழ்ந்த குவலயமெல்லாம்
தனியர சோச்சும் தகைசால் எண்ணம்
துணிவொடு கொள்ளல் துறையமை வேந்தன்
சிறப்பென அறிஞர் செப்பின ரன்றே?
நீதியின் விடுத்த பாரியின் பறம்பினைத்
தென்னவர் அரசில் முன்னுறச் சேர்ப்பதே
துன்னிய செயலென உன்னுதும் வேந்தே.

பாண்: ஆம் ஆம் என்னுள அமைதியும் அதுவே
வேம்பார் தெரியலன் வீரமில் லான்என
எம்போல் வேந்தர்கள் இகழ்வரே,மற்றும்
முன்னவர் தேடிய முதுநில மாள்வது
மன்னிய ஆண்மை மறைந்தவர் செயலே
நாட்டினைப் பெருக்கி நன்னெறி புகுத்திக்
கேட்டினை அகற்றிக் கிளைபல ஓம்பல்
தாளுடை அரசர் கோளென உணரார்
வாளுடன் ஆடும் பேடியர் அன்றோ?

அமை 1: எண்ணித் துணிவது கருமம் அன்றோ
கண்ணினும் நட்ட கடுமாப் பாரியின்
அருங்குணம் ஓர்ந்து நும் அன்புடைத்தந்தை
ஒருங்குடன் அளித்த உரிமையைப் பறித்தல்
பொன்போல் உயர்ந்த புதல்வர்தஞ் செயலோ?
மின்போல் மறையும் மேதினி வாழ்வை
மானம் போற்றும் மன்னவர் உணர்வர்
தானஞ் சிறந்த தமிழ்சேர் பாரியின்
நட்பினை நசித்தல் நயந்தா ராதென

ஒட்பமும் உள்ளமும் உந்தநான் உரைக்கும்
புன்மொழி கேட்டபின் தன்வழிச்செல்க.

பாண் : ஆயின் கூறுக.......

அமை 1 : .... அன்புடை வேந்தே !
"முதலிலார்க் கூதியம் இல்லை அதுபோல்
மதலையாம் சார்பிலார்க் கில்லை நிலை"யென
தொன்னெறிப் பாவலர் சொல்லினர் அதான்று
"பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விட"லென்று நன்குரைத்தார்
முத்திறத்து மக்களுள் முன்னிலையை எய்துபவர்
ஒத்தபெரும் நட்பினராய்க் கூறும் உலகநெறி
நட்பால் விளைவதுபோல் நானிலத்து மற்றெதுவும்
பெட்பாம் நலந்தாரா பேதைமையேன் கூற்றினைநீர்
ஒல்லும் வகையான் நடுநின் றுணர்கபெரும்
மண்தாங்கும் வேந்தர் மரபிற் பருதியெனப்
பண்போடு பாரளிக்கப் பாருலகிற் றோன்றியமால்
நன்றிகலந்த நயனுடையான் பாரிவள்ளல்
வென்றி எனஒன்றே வேண்டும் பெருந்தகையான்
குன்றுசூழ் நாடும் குமைந்த பெருவாழ்வும்
என்றும் விரும்பா இயல்புடையோன் மேலுங்கேள்
தன்னுயிரைக் கேட்டாலும் தானமாய்த் தானீவன்
மன்னுயிரை நின்போல் மதிக்கும் மனமுடையான்
என்னுறினும் உள்ளத்திழுக்கா நடையான்
புகழ்விரும்பி வேந்தர் புனைந்தார் கழலென்றால்
இகழ்வரும்போர் செய்வரோ இப்புவியில் பாரிபகை
பாணர் பெரும்புலவர் பாவலர்கள் மற்றபெரும்
யாணர்க் குடிகளுடன் ஞாலம் விரும்பாது
தோன்றிற் புகழுடனே தோன்றுதல் வேண்டும்
இசையில்லாப் புன்செய்கை ஏற்ப தழகோ
வசையில்லா நற்பொருளை வேட்பினுங் குள்ளோர்
மடிந்தபின் நாம்கொள்ளும் மாண்பொருள்தான்
முடிந்த பொருள் ஆய்ந்து முயல். [என்னே?

அமை 2 : அமைச்சர் கூறிய அருங்கருத் தோரின்

பறம்பினைக் கோடலிற் பயனின் றென்றும்
அறம்பயில் உளத்தனை அடக்கலும் இறைப்பொருள்
கொள்ளலும் எல்லாம் கூடா தென்றும்
தெள்ளிதின் விளங்கும் தெளியக் கூறின்
அவனுடன் எதிர்க்கும் ஆற்றல் நமக்கிலை
புலவரைப் போற்றும் கலையறி உள்ளமும்
நிலம்புகழ் செய்கையும் நேர்ந்திலம் என்றும்
நம்மை நாமே நகையிடை ஆழ்த்தி
இம்மையில் யாவரும் இகழச் செய்தவர்
ஆவோம் என்பதும் அதன்கருத் தன்றோ?

அமை 1: மதியுடை அமைச்சரே மாறாய் உணர்ந்தீர்
நிதியினைக் கருதுதல் நீதி ஆயினும்
அறநெறி யின்வழி அரசன் செல்லுதல்
பெரும்புகழ் தருமெனப் பேசினன் அன்றி
அஞ்சுதல் வேண்டுமென் றறைந்திலன் நம்மின்
படைவலி அறியாக் கடையனோ யானும்?

பாண்: பொருளைக் கருதுதல் புன்மையே அமைச்சே
பறம்பின் வளத்தினைப் பகையேன் மேலும்
திறமுடைப் பாரியைச் செகுப்பே னல்லன்
கொடையினை இகழேன் கோலினைப் பழியேன்
மற்றும் அவன்குணம் மதித்தலைத் தவிரேன்
இறைப்பொருள் கருதி இயம்பினன் அல்லன்

அமை 2: எண்ணம் எதுவோ இயம்புக வேந்தே.

பாண்: கூறுதும் அமைச்ச குறிப்புடன் கேளும்
உபாயம் நான்கையும் உணர்வேன் நண்பனைப்
பகைக்கும் செய்கையைப் பரிப்பனோ அல்லேன்
ஆட்சியின் அடங்குதல் மக்கள் கடனே
குறுநில மன்னர்கள் கோன்வழி நடந்தால்
தெறுபகை நேரா செங்கோல் என்பது
செல்வர் ஏழை திறவோர் அல்லோர்
யாவர் தமக்கும் ஒன்றே மேவிய

நடுநிலே பிறழுதல் நயனிலே அன்றே?
சிற்றர செல்லாம் ஒற்றுமை மேவின்
வெற்றியின் விளங்கும் மீன்கொடி ஆட்சி.
அன்னவர் தம்முள் பலதிறம் புரியின்அம்
மன்னவர் நம்மை மதிப்பரோ? மற்றும்
ஒருவர்க் குயர்வும் ஒருவர்க் கிழிவும்
வழங்குதல் தகுமோ மற்றவ ரெல்லாம்
திறைப்பொருள் அளக்கவும் தீங்கில் பாரி
இறைப்பொருள் தவிர்தலும் நோக்கின் நம்மை
வெகுளுதல் இயல்பே விரவும் உட்பகை
ஆதலின்பாரி அரும்பொருள் யாவும்
தாரா னுயினும் ஏரார் நம்மின்
இலச்சினே போற்றிக் கலத்'தினே' யாயினும்
அளத்தல் சாலும் அன்புடன் கொள்வேன்.

அமை 2: நன்றும் அரசே நவின்றநும் வாய்மொழி
இறைப்பொருளாயினும் திறைப்பொருளென்பது
பணிவினேக்குறிக்கும்.

அமை 1: துணிவது வாயின்
மேதகவுடைய தூதினேவிடுத்து
நீதியை ஓம்பு.

பாண்: அங்ஙனே யாகுக.

அமை: வாழ்க நம் அரசர்.

எல்லோ: வாழ்க! வாழ்க!

(நான்காம் காட்சி முடிவு)

(வளரும்)

"முழக்கம்"
நூல் வடிவில் வெளிவந்துவிட்டது. அடுத்த
திங்கள் முதல் எஞ்சிய பகுதிகள் வெளிவரும்.